ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

## விளாஞ்சோலைப் பிள்ளை அருளிச் செய்த
# ஸப்த காதை

### ஸப்த காதை தனியன்

வாழி நலம் திகழ் நாரண தாதன் அருள்
வாழி அவன் அமுத வாய் மொழிகள் வாழியே
ஏறு திருவுடையான் எந்தை உலகாரியன் - சொல்
தேறு திருவுடையான் சீர்

## விளாஞ்சோலைப் பிள்ளை அருளிச் செய்த

# ஸப்த காதை

அம்பொன் அரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க
சம்பந்தம் காட்டித் தடை காட்டி - உம்பர்
திவம் என்னும் வாழ்வுக்குச் சேர்ந்த நெறி காட்டும்
அவன் அன்றோ ஆசாரியான் (1)

அஞ்சு பொருளும் அளித்தவன் பால் அன்பிலார்
நஞ்சில் மிகக் கொடியார் நாம் சொன்னோம் - நஞ்சு தான்
ஊனை முடிக்கும் அது உயிர் முடிக்கும் என்று
ஈனமிலார் சொன்னார் இவை (2)

பார்த்த குருவின் அளவில் பரிவின்றி
சீர்த்த மிகு ஞானம் எல்லாம் சேர்ந்தாலும் - கார்த்த கடல்
மண்ணின் மேல் துன்புற்று மங்குமே தேங்காமல்
நண்ணுமே கீழா நரகு (3)

தன்னை இறையைத் தடையை சரண் நெறியை
மன்னு பெரு வாழ்வை ஒரு மந்திரத்தில் - இன்னருளால்
அஞ்சிலும் கேடோட அளித்தவன் பால் அன்பிலார்
நஞ்சிலும் கேடு என்றிருப்பன் நான் (4)

என் பக்கல் ஓதினார் இன்னார் எனும் இயல்வும்
என் பக்கல் நன்மை எனும் இயல்வும் - மன் பக்கல்
சேவிப்பார்க்கு அன்புடையோர் சன்ம நிரூபணமும்
ஆவிக்கே நேரே அழுக்கு (5)

அழுக்கென்று இவை அறிந்தேன் அம்பொன் அரங்கா!
ஒழித்தருளாய் உள்ளில் வினையே - பழிப்பிலா
என் ஆரியர்க்காக எம்பெருமாறார்க்காக
உன்னார் அருட்காக உற்று (6)

தீங்கேதும் இல்லாத் தேசிகன் தன் சிந்தைக்குப்
பாங்காக நேரே பரிவுடையோர் - ஓங்காரத்
தேரின் மேல் ஏறிச் செழுங்கதிரின் ஊடு போய்ச்
சேருவரே அந்தாமம் தான் (7)

**விளாஞ்சோலைப் பிள்ளை திருவடிகளே சரணம்**